# முத்தாயம்மாள் நினைவு கல்லூரி

## முதலாமாண்டு மாணவர்களுக்கான வரவேற்பு விழா

இராசிபுரம் – காக்காவேரி – முத்தாயம்மாள் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2016-17-ம் கல்வி ஆண்டிற்கான முதலாமாண்டு இளநிலை அறிவியல் பாடப்பிரிவு மாணவ, மாணவிகளுக்கான 'வரவேற்பு விழா' 08.07.2016 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு முத்தாயம்மாள் கல்வி நிறுவனங்களின் தலைவர். திரு. ஆர். இராமசாமி தலைமை தாங்கினார். பொருளாளர் திரு. ஆர். பிரேம்குமார், கல்லூரி முதல்வர் முனைவர் எம்.ஆர். லட்சுமிநாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தலைமையுரையாற்றிய கல்லூரித்தலைவர் திரு. ஆர். இராமசாமி தன் உரையில் தெரிவிக்கையில் கடந்த 33 ஆண்டுகளாக இக்கல்வி அறக்கட்டளை கல்வியில் பின்தங்கிய இராசிபுரம் பகுதியில் கல்வி நிறுவனம் தொடங்கி தொடர்ந்து முன்னிலைப் பெற்று வருகிறது. இக்கல்லூரியில் ஒழுக்கத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. ஒழுக்கம் இருக்கும் இடத்தில்தான் கல்வி வளரும். இக்கல்லூரியில் மிகச்சிறப்பானத் தகுதிகளைக் கொண்ட ஆசிரியப் பெருமக்கள் பணிபுரிந்து வருகின்றனர். தாங்கள் இக்கல்லூரியில் நன்குப்பயின்று அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந்து தங்கள் பெற்றோர்களுக்கும், இக்கல்லூரிக்கும் பெருமையினைத் தேடி தரவேண்டும் என்றார். பெரியார் பல்கலைக்கழகத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கும், கணிதம் தனிப்பாடத்தில் 100க்கு 100 சதவீத மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் பரிசுகளும், சான்றிதழ்களையும் கல்லூரித் தலைவர் வழங்கி அவர்களைப் பாராட்டினார்.

இந்நிகழ்வில் முத்தாயம்மாள் பாலிடெக்னிக் முதல்வர். திரு. ஜி. விஜயகுமார், கல்லூரிப் பேராசிரியர்கள் முனைவர். என். மோகன்குமார், எஸ். சிவக்குமார், கே. சண்முகப்பிரியா, சி. சுரேஸ்குமார், பி. தீபிகா, ஏ. சாமிதுரை, பி. சண்முகம் ஆகியோர் பேசினர்.

நாமக்கல், சேலம், ஈரோடு, கரூர், திண்டுக்கல், புதுக்கோட்டை, தேனி, இராமநாதபுரம், சிவகங்கை, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, விழுப்புரம், நீலகிரி, அரியலூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து 500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் கலந்து கொண்டனர்.